தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-4] திபி. 2016 மேழம் 14 (27-4-1986) 65 காசுகள் [இதழ் எண்: 71] [பகுதி 5-10

இதோ, ஓர் இருபதாம் நூற்றாண்டு எட்டப்பன்!

தமிழனைத் தமிழனே காட்டிக்கொடுக்கும் கயமைக்கு இதோ, ஓர் எடுத்துக்காட்டு!

பாவலரேறுவைப் பிடித்து உடனடியாகச் சிறையில் அடைக்க வேண்டுமாம்!

அவர் ஒரு வன்முறையாளர், பிரிவினையாளர், தேசப்பகைவர், குற்றவாளியாம்!

அவரின் இதழ்களான தென்மொழி, தமிழ்நிலம், நூல்கள் - ஆகியவற்றின் வழியாகத் தமிழ் மக்களிடம் அவர் நச்சு விதைகளைத் தூவுகிறாராம்! அவை வேர் விட்டுச் செழித்து வளர்கின்றனவாம்!

தனித்தமிழ் இயக்கத்தின் பெயரால், அவர் பிராமணர்களையும், வட நாட்டினரையும் இரக்கமின்றித் தாக்கி வருகிறாராம்!

இந்திய நாட்டுக்கு இரண்டகம் செய்யும் அவர்மேல் உடனடியாக வழக்குப்போட்டு அவரைச் சிறையில் அடைக்கவேண்டுமாம்!

ஈரோட்டுப் பேரா(சையா)சிரியர், நடுவண் அரசுக்கு 'நமஸ்தே' போட்டு எழுதிய காட்டிக்கொடுப்பு மடல்!

(நம் சிறப்புச் செய்தியாளர்)

பாவலரேறு அவர்களைக் கடந்த மூன்றாண்டுகளாகப் பல்வேறு வெளியீடுகளில் இழித்தும் - பழித்தும் எழுதிப் பரப்பிய பின்னும், அப்பேரா(சையா)சிரியரின் வஞ்சினம் தீரவில்லை; உளவேக்காடு தணியவில்லை. இறுதியில் எட்டப்பனாகவே மாறித் தம் உண்மை உருவத்தை வெளிப்படுத்தி விட்டார்! அவர் ஓர் உண்மையான பார்ப்பன அடிமை என்பதையும் புலப்படுத்திவிட்டார்!

கடந்த ஐரோப்பியச் செலவின் பொழுது, பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களிடம் வஞ்சக நட்புக்கொண்டு, முன்னரே நன்கு திட்டமிட்ட நடிப்புடன், அவருடன், பிரான்சு, மேற்கு செருமனி, கிழக்கு செருமனி, சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு வழித் துணையாளர் போல், அவர் அன்பையும்-பரிவையும்-ஆதரவையும் பெற்று, உடன் சென்று, அவரின் பேச்சுகளையும், செயற்பாடுகளையும் உன்னிப்பாகக் கவனித்து குறிப்பெடுத்துக் கொண்டுவந்து, அங்கு அவருக்கு அன்பர்களும், ஈழத் தமிழரும், உ.த.மு.க. அமைப்பாளர்களும் செய்த அன்பளிப்புகளையும், பேசிய பாராட்டுரைகளையும் கண்டும்-கேட்டும், மனம் பொறாமல், பொறாமைத் தீயில் புழுங்கிக் கிடந்து, தமிழ்நாடு வந்த பின்னர், அங்கு நடந்தவற்றைத் தாறுமாறாகத் திரித்தும் திசைத்தும், மிகைத்தும், பழித்தும், இழித்தும், உள்ளன தவிர்த்தும், இல்லன சேர்த்தும், கதையாகவும், கற்பனையாகவும் வடிவம் செய்து, கடந்த மூன்றாண்டுகளாகத் தென்மொழி அன்பர்களை நேரிலும், மடல் வழியிலும் அண்டிப் பேச்சாலும், எழுத்தாலும் பலவாறான அவதூறுகளையும், பழிகளையும், இழிவுகளையும், குறைகளாகவும், குற்றங்களாகவும், தமிழகத்திலும், வெளிநாடுகளிலும், இவையே தம் தலையாய ஆசிரியப் பணியாகக் கருதி, வெளியீடுகளாகவும், நூல்களாகவும், இதழ்களாகவும் தொடர்ந்து எழுதி, அச்சிட்டு விற்றுப் பணமும் மலிவான விளம்பரமும் பெற்று, வாழ்க்கை நடத்திவரும், ஈரோட்டு, வாசவி கல்லூரிப் பேரா(சையா)சிரியர் என்னும் மூ. சதாசிவம் என்னும் மு. சா. சிவம், அண்மையில் பாவலரேறு பற்றி நடுவணரசுக்கு ஒரு காட்டிக்கொடுப்பு மடல் எழுதி, அவர்மேல் அரசு வழக்குத் தொடுக்க வேண்டும் என்னும் வேண்டுகோளையும் விடுத்துள்ளார்.

இன நலங் காக்க வந்த தந்தை பெரியார் அவர்கள் பிறந்து வாழ்ந்த ஈரோட்டில்தான், இன நலந் தீய்க்கவந்த இந்த எட்டப்பனும் வாழ்ந்து வருகிறார் என்பதை எண்ணி வருந்துவதைத் தவிர, வேறு என்ன செய்வது. அவர் மேல் அவதூறு வழக்கு ஒன்று, வழக்கு மன்றத்தில் இருப்பதால், வேறு விளக்கமான செய்திகளைப் பற்றிக் குறிப்பிடுவதற்கியலாமைக்கு வருந்துகிறோம். வழக்கு முடிந்தபின் இத்தகைய இனங்கொல்லிகளிடம் மக்கள் எச்சரிக்கையாக இருக்கும்படி செய்திகள் வரும்.

நடுவணரசுக்கு அவர்எழுதிய காட்டிக்கொடுப்பு மடலை இங்கு வெளியிடுவதன் நோக்கம், அவர் பாவலரேறு பற்றி அரசுக்குத் தெரிவித்துவிட்டார் என்பதற்காக அன்று. இத்தகைய நெஞ்சில் குத்தும் காட்டிக் கொடுப்பவர்களிடம் அவரின் பல்லிளிப்புக்கும் சொல்லினிப்புக்கும் ஏமாறி, அவருடன் பழகியும், அவருக்கு ஆதரவளித்தும், அவரை ஊக்கப்படுத்தியும் வருகிற அன்பர்களுக்கும், அறிஞர்களுக்கும், அவரால் காலப்போக்கில் என்னென்ன

(தொடர்ச்சி 2 ஆம் பக்கம் பார்க்க)

இதோ ஓர் எட்டப்பன்...!

விளைவுகள் நேரும் என்பதை அறிவிக்கும் பொருட்டே இதனை இங்கு வெளியிடுகிறோம்.

மற்றபடி, பாவலரேறு நடவடிக்கைகள் பற்றி இவர் இங்குக் கூறிய செய்திகளையும் இவர் தாறுமாறாகப் பரப்பிவரும் செய்திகளையும் பற்றி இவரினும் நன்றாக அரசுத் துறையும், காவல் துறையும் அறிந்தே வைத்திருக்கின்றன.

உண்மையான நேர்மையான இனநல நோக்கத்துடன் செய்யும் முயற்சிகளுக்கு, அரசிடமிருந்தும், இவர் போலும், வஞ்சகர்கள், காட்டிக்கொடுக்கும் கட்பகைவர்கள், எதிரிகள் ஆகியோரிடமிருந்தும் எத்தகைய விளைவுகள் வரும் என்பது பாவலரேறு அவர்கள் அறியாததன்று அவ் விளைவுகளையும், துன்ப துயரங்களையும், இடர் - இடுக்கண்களையும், சிறை இழப்புகளையும், பழி இழிவுகளையும் சிறுமை கீழறுப்புகளையும் வம்பு வழக்குகளையும், சண்டை-சழக்குகளையும் நாள்தோறும் நொடி தோறும் எதிர் பார்த்துத்தான் நெருப்பாற்றில் இவ்வாறு எதிர் நீச்சல் அடித்துக்கொண்டு, இவ் வரும்பெரும் பணியில், பிறர் செய்தற்கும்-பேசுதற்கும் அஞ்சும் இவ் வினநல நாட்டுநலத் தொண்டில் பாவலரேறு அவர்கள், தம்மையும் தம் குடும்பத்தையும் ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்கள் என்பதை அவரின் கடந்த முப்பது,முப்பத்தைந்து ஆண்டின் தொடர்ந்த தூய தொண்டினை உள்ளும், புறமும் இருந்து அறிந்தவர்கள் நன்கு உணர்வார்கள்.

இருப்பினும், அறிவியல் வளர்ச்சியும் வாழ்க்கைப்பாடுகளும், மிக மலிந்துவிட்ட இக் காலத்திலேயே இக் காட்டிக் கொடுப்பான்களால், இத்துணை இடரும், இடர்ப்பாடுகளும் உண்மையான நாட்டு இனத் தொண்டுக்கு ஏற்பட்டால், தமிழினம் முழுவதுமாய் வீழ்த்தப்பட்டுக் கிடந்த இருண்ட அவ்விடைக் காலத்திலும் விடுதலை வீரன் கட்டபொம்மன், புலித்தேவன் காலத்திலும், நாட்டுக்கு உண்மையாக உழைத்தவர்கள் எத்துணையளவு இடர்ப்பட்டிருப்பார்கள் என்பதை நாட்டு, இன நலங்கருதும் மெய்த் தொண்டர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம்.

இனி, அவ்வீரோட்டுப் பேரா(சையா)சிரியர் நடுவணரசுக்குப் பாவலரேறு அவர்களைப் பற்றி, அவர்களுக்கு 'நமஸ்தே' போட்டு எழுதிய காட்டிக் கொடுப்பு' மடலைப் படித்துப் பார்த்து, இத்தகைய ஒருவரின் பொருமைத் தீயின் அளவையும், இரண்டக உள்ளத்தையும் தெளிவாகத் தெரிந்து கொள்ளுங்கள்.

இம் பொழிபெயர்ப்பின் ஆங்கில மூல மடலும் இவ்விதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

அவர் எழுதிய காட்டிக் கொடுப்பு மடல்

ஈரோடு-11.
நாள்; 21–2–1986

ஐயா,

பொருள்: தீவிரக்காரரர் (தீவிரவாதி) பெருஞ்சித்திரனார், ஆசிரியர்: தென்மொழி, தமிழ்நிலம் (தமிழ்த்தேசம்), 5, அருணாசல ஆசாரித்தெரு, திருவல்லிக்கேணி சென்னை-5-இல் இருந்து வெளியிடப் பெறுவன. கடந்த 20 ஆண்டுகளாகத் தனித்தமிழ் நாட்டுக்காகக் கருத்துகளைப் பரப்புவதில் ஈடுபட்டு வருபவர். அவரின் தொடர்ந்த பிரிவினைக்கும், தேசத்திற்கு மாறானதற்குமான நடவடிக்கைகள். ஒரு குற்ற வழக்கை வழக்கு மன்றத்தில் அவர் மேல் தொடர்வதற்கான வேண்டுகோள்!

நமஸ்தே, கீழ்க்காணும் செய்திபை மதிப்புமிக்க தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாத இதழாகிய 'தென்மொழி', கிழமை இதழாகிய 'தமிழ்நிலம்' ஆகியவற்றின் ஆசிரியரான பெருஞ்சித்திரனார், கடந்த 20 ஆண்டுகளாகத் தேசப்பகையான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார். அவருடைய இதழ்கள் மூலமாகவும், நூல்கள் வழியாகவும், நாட்டுப் பிரிவினைக் கருத்தும், ஓர் இன வெறுப்பு மான நச்சு விதைகளைத் தமிழ் மக்களிடம் விதைத்து வருகிறார். ஒட்டுமொத்தமான பிராமண இனத்தின் மேல் அவர் செய்யும் இரக்கமற்ற, கொடிய தாக்குதலுக்கு, 'ஆரியப் பார்ப்பனர்களின் அளவிறந்த கொட்டங்கள்' என்னும் பெயரில் தமிழில் அவர் எழுதிய ஒரு நூலே எடுத்துக்காட்டாக உள்ளது.

ஒரு கடுமையான பிராமண எதிரியாக உள்ள அவர், கடந்த 25 ஆண்டுகளாகப் பிராமணர்களுக்கு எதிரானவையும், பிராமண இனத்தின்மேல் வெறுப்பையூட்டக் கூடியவையும் ஆன கருத்துகளைப் பரப்பி வருகிறார். 'தனித் தமிழ் இயக்கம்' என்னும் பெயரில், பிராமணர்களின் மேலும், வட இந்தியர்களின் மேலும், ஆழமாக வேர்விடக்கூடிய பகையுணர்ச்சியை அவர் பரப்பி வருகிறார். நச்சுத் தன்மைகொண்ட அவ்வுணர்ச்சி விதைகள், தமிழ்நாட்டில் ஆழமாக வேர் விட்டு, முளைத்திருக்கின்றன. அதனால், தமிழ்நாட்டின் மக்கள் பலரும் தனித்தமிழ் நாடு பற்றிக் கருத்தளவில் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறார்கள். எனவே, பெருஞ்சித்திரனாரின் (நாட்டுப்) பிரிவினை நடவடிக்கைகளை அடக்குவதற்கு, இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் அவர் செய்கின்ற தேசப் பகையான (தேச விரோதமான) மறைமுக நடவடிக்கைகளுக்காக அவர்மேல் வழக்குத் தொடர்வதற்கும் இதுவே சரியான நேரம்.

2. 1983 இல் ஐரோப்பிய நாடுகளுக்கு அவர் மேற்கொண்ட பயணத்தில் எங்கும் அவர் தனித்தமிழ் நாடு பற்றியே கருத்துகளை பரப்பினார். பாரிசில் வசிக்கும் திரு எசு. ஆர். பிரான்சிசு என்னும் ஓர் இலங்கைத் தமிழரும், அரிமா தனராசு என்பவரும் தனித்தமிழ் நாட்டை உருவாக்கும் முயற்சிகளுக்காகப் பெருஞ்சித்திரனார்க்கு, ஐந்து இலக்கம் (இலட்சம்) உருபாக்களை அனுப்பித் தருவதாக உறுதிகூறினார்கள். (பாரிசில் திரு: எசு. ஆர். பிரான்சிசு, அரிமா தனராசு ஆகியோருடன் பெருஞ்சித்திரனார் நடத்திய கமுக்கமான (இரகசியப் பேச்சின் பொழுது நானும் உடனிருந்தேன்.) திரு. எசு. ஆர். பிரான்சிசு, அவரின் மாத இதழான 'தென்மொழி'யின் அன்பர்களில் ஒருவர்.

3. கடந்த காலங்களில், பெருஞ்சித்திரனார் பல சமயங்களில், அவரின் தேசப்பகையான நடவடிக்கைகளுக்காகச் சிறையில் வைக்கப் பெற்றவர். 1965 - இல் அவரின் இந்தி எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காகச் சிறைப்படுத்தப் பெற்றார். 'மிசா' காலத்தில் அவர் சிறையில் இடப்பெற்றார். 1983 - இல் அவர் பொதுவிடத்தில் 'மனுஸ்மிருதி'யின் படிகளை எரித்ததற்காகச் சிறைப்படுத்தப் பெற்றார்.

1984 - இல் ஓர் இளைஞர் குழுவிற்குத் தனித் தமிழ் நாட்டுப் போராட்டத்திற்காக ஒரு சிறப்புப் பயிற்சியைக் கொடுத்தார்.

கடந்த 1985 ஆகஃசுடு மாதம், பிரிவினையைத் தடை செய்யும் பாராளுமன்றச் சட்டத்தைத் தம்மைச் சார்ந்த மிக்க ஆர்வமுடைய பின்பற்றாளர்களுடன் பல இடங்களிலும் எரிக்கின்ற முயற்சியைச் செய்யவிருந்தார்.

1985, நவம்பரில், தலைமையமைச்சர் இந்திரா காந்தியின் உடல் சாம்பலை இந்தியாவின் பல பகுதிகளுக்கும் எடுத்துச் சென்ற, அரசின் அறிவார்ந்த செயலுக்கு அறை கூவுவதுபோல், நடுவணரசின் மீது, உரிமை வழக்குத் தொடர்ந்தார். 'இந்து' நாள் இதழில் வெளிவந்த அவ்வழக்கின் தீர்ப்புரைச்செய்தி இத்துடன் இணைக்கப் பெற்றுள்ளது.

4. அவருடைய மாத வெளியீடான 'தென்மொழி'யின் ஒவ்வோர் இதழிலும், தனித்தமிழ்நாட்டின் தவிர்க்கமுடியாத தேவையை வலியுறுத்தி உறுதியான கருத்துகளையும், முழக்கங்களையும் பரப்பி வருகிறார். அவை எடுத்துக்காட்ட இயலாதவாறு மிகவும் அதிகமானவை. எடுத்துக் காட்டாக ஒரு சில இங்கு குறிக்கப் பெறுகின்றன.

(1) 1985 ஏப்ரல் தென்மொழி இதழில், தனித் தமிழ் நாட்டுக்காக, அரசுக்கெதிராக மக்கள் எழுச்சி கொள்ள வேண்டுமென்று ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

(2) 1980, சூலை வெளியீட்டில், அவர் கூறியிருந்தது இது. "நாங்கள் புலிகள் நாம் தனித் தமிழ் நாட்டை உருவாக்குவோம்".

(3) 1975 ஆண்டு வெளியீட்டில் (மாதம் குறிப்பிடப் பெறவில்லை.) தனித்தமிழ் நாட்டைக் கோருமாறு மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. 1966 நவம்பர் வெளியீட்டில், தனித்தமிழ் நாட்டை இந்தியாவிலிருந்து பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று, நடுவணரசுக்கு ஓர் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

(5) ஒவ்வோரிதழின் முதல் பக்கத்திலும் கட்டங் கட்டிக் கட்டிப் பின்வருமாறு ஒரு கொள்கையறிவிப்பை அவர் வெளியிட்டுக்கொண்டு வருகிறார்: "தமிழக விடுதலைதான் நம் முழு மூச்சு, நோக்கம், முயற்சி".

(6) தங்களின் பார்வைக்காக, அவர் எழுத்துகளிலிருந்து என்னால் தொகுக்கப்பெற்ற 'பெருஞ்சித்திரனின் வசைகள் (அவதூறுகள்)' என்னும் பெயரிட்ட நூல் ஒன்றை இத்துடன் அனுப்பிவைத்திருக்கின்றேன். திருவாட்டி இந்திரா காந்தி, இராசாசி, பக்தவத்சலம், எம். சி. இராமச்சந்திரன், கருணாநிதி முதலியவர்களைப் பற்றி அவர் அருவருப்பான நடையில் அவதூறு மொழிகளை வெளிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு உயர்ந்த தலைவர்களைப்பற்றி அவர் இதழ்களில் அவதூறுகளை வெளியிட்டுக்கொண்டு வரும் தகுதிக்குப் பொருந்தாத பழக்கத்தை நிறுத்துமாறு, பலமுறைகள் நான் கேட்டுக் கொண்டதையும் அவர் பொருட்படுத்தவில்லை. அவருடைய இத்தகைய தேசப் பகையான, இனப்பகையான நடவடிக்கைகளைச் சட்டத்தின் படி வழக்கு மன்றத்தின் வழியாக மட்டுமே தடுத்து நிறுத்த முடியும் என்று நான் நம்புகிறேன். அதனால், ஐயா, திரு.பெருஞ்சித்திரனார் மேல் சட்டப்படி வழக்குமன்றத்தில் ஒரு வழக்குத் தொடுக்கும்படி தங்களை தொழுது வேண்டிக்கொள்கிறேன்.

அவ்(வாறு தொடரப்படும்) வழக்கில் என்னையும், சான்றாளர்களில் ஒருவனாக அன்புடன் சேர்த்துக்கொள்ளவும்.

தங்களுக்கு நன்றி கூறிக்கொள்ளும், தங்களின் நம்பிக்கைக்குரிய,

(கையொப்பம்)
மு. சதாசிவம்.

இலண்டனில் தாய்மொழி(தமிழ்)க் கல்வி கற்பித்தல் கருத்தரங்கு!

பெருந்தகையீர், கடந்த 23–2 1986 அன்று காரிக்கிழமை, மேற்கு இலண்டனிலுள்ள ஆக்டன் நகர மண்டபத்தில் தாய் மொழி (தமிழ்)க் கல்வி பயிற்றுவித்தல் பற்றிய ஒரு நாள் கருத்தரங்கம், மேற்கு இலண்டன் தமிழ்ப் பள்ளியினரின் ஏற்பாட்டின்பேரில் நிகழ்வுற்றது. கீழ்க்காணும் தமிழ்ப்பள்ளியினர், கலைக்குழுவினர் மற்றும் ஆர்வமுள்ள பொது மக்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்

1. பிரண்டு பகுதித் தமிழ் மன்றத் தமிழ்ப் பள்ளி.
2. ஆசிய மேம்பாட்டு இயக்கம், எங்பீல்டு.
3. வால்தம் பாரெசுடு தமிழ்ப்பள்ளி.
4. இலண்டன் தமிழ்ச் சங்கத் தமிழ்ப்பள்ளி.
5. மேற்கு இலண்டன் தமிழ்ப்பள்ளி.
6. தமிழர் முன்னேற்றக் கழகத் திருவள்ளுவர், தமிழ்ப்பள்ளி.
7. இலண்டன் (விம்பிள்டன்) தமிழ்ப்பள்ளி.
8. கிளாசுகோ தமிழ்ப்பள்ளி.
9. இலண்டன் திருமுருகன் கோயில் கலைப்பள்ளி.
10. கணபதி கோயில் கலைப்பள்ளி.
11. தென்மேற்கு இலண்டன் தமிழ் இளைஞர் மன்றத் தமிழ்ப்பள்ளி.
12. மேற்கு இலண்டன் தமிழ்ப்பள்ளி.

அன்று காலை 10 மணிக்குத் தொடங்கிய கருத்தரங்குக் கூட்டத்துக்கு முனைவர் யோன் வால்சு (குழுகாயக் கல்வி அதிகாரி) தலைமையேற்றார். திரு. சிவகுருநாதன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

பின்னர், அனைவோருக்கும் கல்வி பயக்கும் வழிவகைகளைக் கண்டறிய கூட்டப்பெற்ற சுவான் குழுவினரின் அறிக்கையில் காணப்பெறும் நிறைகுறைகளை விளக்கி, திருவாட்டி ஆன் தம்மெட் அவர்கள் உரையாற்றினார்.

திரு சப்தார் அல்லாடீன் சிறுபான்மையினருக்குத் தாய் மொழி பயிற்றுவித்தல் பற்றியும், திருவையாறு எசு. கிருட்டிணன், தமிழின் தொன்மை பற்றியும், விளக்கவுரை ஆற்றிய பின், முனைவர் ஏ. எசு. சிற்றம்பலம் அடுத்த பத்தாண்டுகளில் இந்நாட்டில் வாழும் சிறுபான்மையாளோர்க்கான வேலை வாய்ப்புகளைப் புள்ளி விளத்தங்களுடன் விளக்கினார்.

நண்பகல் உணவுக்குப் பின், இங்கியங்கும் தமிழ்ப் பள்ளிகளின் மொழி, கலைப் பாடத் திட்டம் ஒன்றை உருவாக்க, மொழித் துறையினர் தமிழ் மணி அரங்க முருகையன் அவர்களின் தலைமையிலும், கலைத் துறையினர் திருவாட்டி பிரேமா-கணேசன் அவர்கள் தலைமையிலும் கலந்துரையாடல் ஆய்வு மேற்கொண்டனர்.

மாலையில் பல்வேறு தமிழ்ப் பள்ளியினர், கலைஞர்கள் பங்கேற்ற இசை, நடனம், கோலாட்டம் முதலியவை நிகழ்வுற்றன. பாட்டரங்கமும் இடம் பெற்றது.

மாநாட்டரங்கில் தமிழிலக்கியம், நுண்கலைகள், பள்ளிகள் பற்றிய விளக்க நூல்கள், படங்கள் திரு. சர்வானந்தரின் ஏற்பாட்டில் பார்வைக்கு வைக்கப் பெற்றிருந்தன.

திரு. அனிபா கணிப்பொறியினைப் பயன்படுத்தி எங்ஙனம் தமிழை ஒளி, ஒலி வழிப் பயிற்றுவிக்கலாம் என்பதைக் கருவிகள் பொறி வழி விளக்கினார்.

நிகழ்ச்சியின் இறுதியில் தமிழ்மணி அரங்க முருகையன் நன்றி நவின்றார். கருத்தரங்கிற்கு வந்திருந்தோர் 'மெத்த வளருது தமிழ் மேற்கே' என்ற மகிழ்ச்சியுணர்வோடு வீடு திரும்பினர்.

இக் கருத்தரங்கு நடத்த ஆகும் செலவினை இலண்டன் மாநகராட்சியினர் (Greater London Council) ஏற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

செய்தி: தமிழ்மணி அரங்க முருகையன்

போலித்தமிழரிடம் எச்சரிக்கையாய் இருங்கள்

ஓய்ந்திடல் இல்லை,என்உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை, என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-3] இதழ் எண்: 7((·7·4 1986) [பகுதி-[illegible]·10

உலகத் தமிழ்ச் சங்கம்!

திருவள்ளுவர் நமக்குச் சார்பாகக் கருத்துரைக்கிறார்.

1. உயர்ந்த நோக்கம்; உருப்பெறாத முயற்சி :

ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார். - 463

நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று. - 4[illegible]7

2. ஆரவாரம், விளம்பரம்-இவற்றால் தமிழ் வளராது :

பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்
பேதை வினைமேற் கொளின். - 836

ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும். - 468

3. தமிழ் அறிந்தவர்கள், தமிழை அறிந்தவர்கள் ஆகார்!

நன்றாற்ற லுள்ளும் தவறுண்(டு) அவரவர்
பண்பறிந்து ஆற்றாக் கடை. - 469

அறிந்தாற்றிச் செய்கிற்பாற்(கு) அல்லால் வினைதான்
சிறந்தானென்(று) ஏவற்பாற் றன்று. - 515

4. நோக்கம், செயல்திட்டம்,
தெளிவு-இம் மூன்றுமிலாத முயற்சி!

செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ(டு)
எய்த உணர்ந்து செயல். - 516

அறிவுடையார் ஆவது அறிவார்; அறிவிலார்
அஃதறி கல்லா தவர். - 427

5. செயல் திறமும் நுண்ணிய வரலாற்றறிவுமே, இன்றைய நிலையில் தமிழையும், தமிழினத்தையும் மீட்டெடுக்க உதவும்; கழகக் காலம் போல், வெறுந் தமிழ்ப் புலமையால் ஒரு பயனும் விளையப் போவதில்லை!

ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி. - 1022

அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை. - 1027

6. மக்கள் பணத்தில் பத்துக்கோடி உருபா ஒதுக்குகிறார்களாம்! ஐயகோ! தமிழின் பெயரால்
அதைப் பங்கு போட்டுக் கொள்ளவா?

இறப்பே புரிந்த தொழிற்றாம் சிறப்புந்தான்
சீரல் லவர்கட் படின். - 977

ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்ற கடை. - 837

ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி. - 477

7. தமிழுக்காகவே வாழ்பவர்களைத் தேராமல்
தமிழால் வாழ்பவர்களையே தேர்கிறார்களே!

இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோ(டு) ஒழுகப் படும். - 698

செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல். - 677

தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும் - 614

எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர். - 514

இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல் - 517

8. தம்மை முகமன்கூறிப் பாராட்டி வாழ்பவர்களே
தமிழுக்காக வாழ்பவர்கள் ஆவார்களா?

சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு. - 976

அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல். - 443

(தொடர்ச்சி 3 ஆம் பத்தி பார்க்க)

இருபதாம் நூற்றாண்டின் எட்டப்பன்!

பேராசிரியர் மு. சதாசிவத்தின்
மூல ஆங்கில மடல்.

Sir,

Sub: Extremist Mr. Perunchitranar, Editor of THENMOLI & TAMIL NILAM, (Tamildesam) (being published from No. 5, Arunachala Achari Street, Triplicane. Madras-5 -indulging in a propaganda for a separate Tamil State for the past 20 years-his continuous Secessionist and a tinational[a]ctivities a criminal case to be instituted against him in the Court of Law-requested.

Namaste. I have the honour to bring it to your kind notice that mr. Perunchitranar, the Editor of a Tamil Monthly called THENMOLI and a Weekly called Tamilnilam (Temildesam) has been indulging in antinational activities for the past 20 years. Through his journals and books he has sown the seeds of secession and communal and hatred among the Tamils. His book entitled 'The Unlimited Atrocities of the Aryan Brahmins' (in Tamil) is a standing example for his merciless attack on the Brahmin Community as a whole. As a staunch antagonist of brahmins he has been spreading anti brahmin and communal hatred for the past 25 years. In the name of 'Pure Tamil Movement' he has spread deep-rooted enmity and hatred for the Brahmins and North Indians. The poisonous seed thus sown by him has taken deep roots in Tamilnadu and many people in Tamilnadu have begun to think in terms of a seperate Tamil State. It is high time that the secessionistic activities of Perunchitranar should be curbed and he should be brought to trial for his antinational and underground activities both in India and abroad.

2. During his tour to the European Countries in 1983 he propagated everywhere a seprate Tamil State. A Ceylon Tamilan residing in Paris named Mr. S. R. Francis and a Tamilian called Arima Dhanaraju have promised to send Perunchitranar a sum of Rs. 5 Lakhs for his efforts to form a separete Tamilnadu. (I was present when Perunchitranar was holding secret talks with Mr. S. R. Francis and Arima Dhanaraju in Paris). Mr. Frencis is one of the patrons of his monthly, 'THENMOLI',

3. In the past Mr. Perunchitranar was, put behind the bars on several occasions for his antinational activities. In 1965 he was arrested for his agitations against Hindi. During the MISA period he was put in the jail. In 1983 he was arrested for burning the copies of Manusmriti' in puplic.

In 1984 he gave a special training for a band of young people for fighting for a separate Tamil State.

In August 1985 he made an attempt to burn the parliament Act which bans Seperatism in several places of Tamilnadu along with his ardent followers.

In November 1985 he filed a writ petition against the Central Government challenging the Govt's wisdom of taking the ashes of the Prime Minister Indira Gandhi to different parts of India'. The Judgement as appeared in the 'Hindu' is enclosed.

4. In every issue of his monthly 'THENMOLI' he is progating the seperation of Tamilnadu and is publishing slogans and categorical statements for the imperative need for a seperate Tamil State They are too many to be mentioned here. A few instances are given here :

(1) In the 1985 April Issue of Thenmoli he appealed to the people to rise against the Government for a separate Tamilnadu.

(2) In the 1980 July issue he pronounced thus: 'We are Tigers and we would form a separate Tamil State'.

(3) In the 1975 issue he appealed to the public to demand for a separate Tamil State.

4. In Nov, 1966 he issued a warning to the Central Government to seprate the Tamildesam from the Union.

5. On the front page of every issue he is publishing a proclamation in a box thus; "Only the liberation of Tamildesam is my very breath, aim, principle and effort".

6. For your referance the book called "The Scandals published by Perunchitran" Compiled by me from his writings is submitted herewith. He has published many scandals in a filthy language against Mrs Indira Gandhi, Rajaji, Bhaktavatchalam M G.Ramachandran Karunanidhi etc,.

தொடர்ச்சி 6 ஆம் பக்கம் பார்க்க

போருக்கினி எழுக!

— வள்ளி கேள்வன்

கோழைத்தனம் கொண்டாரில்லை ஈழத்தமிழ் இளைஞர்
வாழத்தமிழ் ஈழம்பெற போருக்கினி அணியர்
மோழைத்தமிழ் அரசா,இனி ஈழம்பெற உதவும்?
கோழைக்கொரு நாளுந்திறம்கூடாதென அறிவோம்!
தாய்நாடெனத் தமிழ்நாடிவண் இருந்தும்பயனிலையே?
தாய்நாட்டினை ஆள்வோர்நரி நாய்போல்இழிந்தனரே?
பேய்ச்சிங்களர் தொடருங்கொலைக்(கு) அளவேயிலை
அலரோ!

மாயும் உயிர் ஒன்றேயினி மறங்கொண்டெழு தோழா?
மக்கள்தமை மடமைப்பட வைத்தே அரசாள்வோர்!
குக்கலென தில்லிக்கவர் குழைவார் திறம் இல்லார்!
பொக்கம்மிகுபுன்மை அரசியல்வாழ்வினில்மகிழ்வோர்!
தக்காரெனத் தருக்கித்திரிவோரா,துணை தருவார்?
குலமாதர்கள் கறைபட்டனர் கொடுங்[illegible]டையர்
வெறியால்

மலர்போலிளம் குழந்தைகளும் மடிந்தார் அவ[illegible]
வெறியால்

வளர்சோலைகள் மனையாவையும் எரியுண்டது
வெறியால்

அலைபாய்வதிங் கீழத்தமிழ் இனம்!சிங்[க]ள[ர்]
வெறியால்

இங்கேதமிழ் ஈழம்எனும் இலக்காய் உயிர் மூச்சை
மங்கும்படிச் செய்புக்கர வு) ஒப்போம் வெறும் பேச்சை
அங்கிங்குடன் பாட்டுக்கென அமைக்குப நடிப்பு)
ஏலோம்

பொங்கும்பெரு வெள்ளம்எனப் போருக்கினி எழுக!

பொதுவுடைமைப் பாவாணர்
பேரறிஞர் குணா
அவர்களின் புதிய வரலாற்று நூல்!

இந்தியத் தேசியமும்-திரவிடத் தேசியமும்!

வெளிவந்து விட்டது!
விற்பனைக்கு அணியமாயுள்ளது!!
420 பக்கங்கள் விலை உருபா 25.
சலுகை விலையாக
உரு. 20 க்குக் கிடைக்கும்.
[அஞ்சல் செலவு தனி]

தாமரை கலை இலக்கிய மன்றம்
16 சபாபதி தெரு,
[காமராசர் சாலை குறுக்கு]
வெங்காலூர்-560001. -(Bangalore-1.)

9. தமிழுக்காகவே வாழும் தகுதிறம் உடையவர்களைப் புறக்கணிக்கலாமா? பகைக்கலாமா? அவ்வாறாயின் அச்செயல உருப்படுமா?

ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும். -899

10. எது செய்யவேண்டும் என்று எண்ணிச் செய்வதா? எதையாவது செய்யவேண்டும் என்று செய்வதா?

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.-

தெளிவி லதனைத்தொடங்கார் இளிவென்னும்
ஏதப்பா டஞ்சு பவர் 464

முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலா அ தவர் 640

‘சங்கம்’-வடசொல்! இது தமிழுக்கு எப்படி உழைக்கும்?

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திற்கு வட ஆர்க்காடு ஆசிரியர்களின் நன்கொடை!

வட ஆர்க்காடு மாவட்டம், அரக்கோணம் வட்டத்தில் நெமிலி ஒன்றியத்தில் உள்ள ஆசிரியர்கள் அனைவரும் சேர்ந்து தமிழீழப் போருக்குத் தங்களால் ஆன உதவியைச் செய்யத் திரும்பினார்கள்.

அதன்வழி, தமிழ்த் தேசிய இன எழுச்சியின் முனைப்பான செயற்பாடுகள் ஈடுபட்டுவரும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திடம் நன்கொடை அளிக்க ஏற்பாடாகியது.

கடந்த 8-3-86 சனிக்கிழமை அன்று நெமிலி தொடக்கப் பள்ளியில் ஒன்றியத்தின் அனைத்து ஆசிரியர்களும் ஒன்றுகூடிக் கொடையளிப்பு நிகழ்ச்சிக்கு வந்திருந்தனர். அழகிய எளிய அணிப்பந்தலின் கீழ் எடுப்பான மேடையில், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகச் செயற்குழுத் தலைவர் அமர்ந்திருந்தார். அவருடன், விழாத் தலைவராக நல்லாசிரியர் பரிசு பெற்ற மூத்த ஆசிரியர் திரு. வே. மா. திருஞானம் அவர்கள் வீற்றிருந்தார். வட ஆர்க்காடு மாவட்ட உலகத் தமிழின முன்னேற்றக் கழகக் கிளைச் செயலர் புலவர். குமார-கன்னெளியனுர் அவர்களும் மேடையை அணி செய்தனர். வ. ஆ. மாவட்ட 'உலகத் தமிழின முன்னேற்றக் கழக' அமைப்பாளர், மா. செ. தமிழ்மணி அவர்கள் அறிமுக உரை ஆற்றினார். 'இன விடுதலைப்போரில் ஈடுபட்டுள்ள திரு. உமா மகேசுவரன் என்னும் முகுந்தன் அவர்களுக்கு அறிமுகம் ஒன்றும் வேண்டியதில்லை. நாம் ஒருவரை ஒருவர் இனங்கண்டு கொள்ள இவ்வுரை தேவைப்படுகிறது. இன்று தோழர் முகுந்தன் அவர்களை வரவேற்பது என்பது தமிழின விடுதலையை வரவேற்பதாகும்' என்று கூறி அமர்ந்தார்.

பின், சேந்தமங்கலம் ஆ. ச. நடுவச் செயலர், திரு. சே. பு. மணுசை வரவேற்புரை வழங்கினார். தலைவர் முன்னுரைக்குப் பின், உணர்வுரையாக ஆசிரியர் இனமும்; அரசு அலுவலர் சங்க உறுப்பினரும் உரையாற்றினர்.

அடுத்து, த. ம. வி. கழகத்தின் குழுக அரசியல் அமைப்பின் பொறுப்பாளர், திரு. அரசங்கோ இலங்கைத் தீவின் வரலாறு உரைத்தார். தொல் முந்தைய ஆட்சி வரலாறுகளையும், ஐரோப்பியர் வருகையும், ஆட்சியும், இலங்கைத் தீவின் விடுதலை எனும் நிகழ்ச்சி நிலையும் எடுத்துரைத்தார். இனத்தின் மாபெரும் தமிழ்த் தேசிய இனத்தின் ஆளுமை வீழ்ச்சி எழுச்சிகளை எடுத்துரைத்தார். பெருந்தொகையான சிங்கள இன மக்கள் சிற்றளவான தமிழின மக்களின் நலன்களை அழித்தொழித்துவரும் அவல வரலாற்றையும் எடுத்துரைத்தார். அவரின் எழுச்சிமிக்க உணர்வுரை, கூடி இருந்த ஆசிரியர்கள், பொதுமக்கள் அனைவரையும் உணர்வு நிலையில் ஆழ்த்தி ஒன்றி இருந்து கேட்க வைத்தது.

பின்னர், நிகழ்வின் முத்தாய்ப்பாக நல்ல இன நலக் கருத்தாளர், பனப்பாக்கம் ஆ. ச. செயலர், திரு. க. கிருட்டிணன் அவர்கள், கழகத் தலைவர் உமா மகேசுவரன் அவர்களிடம் உருபா. 6803-ஐ வழங்கி விருந்துரை ஆற்றினார்கள்.

இத்தொகையைப் பெற்றுக்கொண்ட முகுந்தன் அவர்கள் தேசிய இன விடுதலைப் போராட்டம் என்பது என்ன? அப்போராட்டங்களை நிகழ்த்தி வரும் இயக்கங்கள் அவற்றின் போக்கு முறைகள் வெற்றி - தோல்விகள் இவைபற்றி எல்லாம் ஓர் அரசியல் அறிவாளன் என்னும் நிலையில் இருந்து விளக்கினார்.

சிறப்பாகக் கருவி ஏந்திச் செய்யும் இன விடுதலைப் போரில் ஓர் இயக்கத்தின் சரியான செயற்பாடு என்பது அம்மக்களின் நிகழ்கால-எதிர்கால தன்மைகளுக்குப் பாதுகாப்பானதாக இருப்பதுவே என்றார். அவ்வகையில்தான் தம் இயக்கம் தக்க காலம் கனியும் வரை காத்திருந்து, சிங்கள முதலாளிய வல்லதிகாரத்தை அழித்தொழிக்கும் என்றார். அஃதன்றி, உலகின் எப்பகுதி தேசிய இன எழுச்சிக்கும், ஒப்புரவு அரசமைப்பிற்கும் தம் கழகம் துணை நிற்கும் என்று விளக்கி, இந்நில உருண்டையில் தமிழினத்திற்கென்று உரிமை பெற்ற நாட்டை விரைந்து சமைப்போம் என்று மக்களின் கை தட்டல்களுக்கு இடையில் கூறினார்.

இந்த அருமையான நிகழ்ச்சிக்கெல்லாம் பல நாளும் உழைத்த நெமிலி ஆ. ச. செயலர் திரு. மு. கடிகாசலம் அவர்கள் நன்றி கூறினார். பின் கூட்டம் தமிழின உணர்வுடன் கலைந்தது.

இக்கொடையளிப்பு நிகழ்ச்சியும் இதற்கென ஒரு கிழமைக்கும் மேலாக ஊர் மக்களிடம் செய்யப்பெற்ற கருத்துப் பரப்புதல்களும், ஊராட்சித் தேர்தல் காலமான இப்பரபரப்பும் இன உணர்வைத் தூண்டுவனவாக அமைந்தன.

'உலகத் தமிழின முன்னேற்றக் கழக' மாவட்டக் கிளை திரு. உமா மகேசுவரன் அவர்களின் வருகையைப் பெரும் அளவில் சுவரொட்டி வழி விளம்பரப்படுத்தியதும், நாகவேடு ஆ. ச. செயலர் திரு. தேவராசன், பனப்பாக்கம் ஆ. ச. துணைச் செயலர் திரு. க. வெங்கடேசன் ஆகியோரின் இடையுறா உழைப்பும் குறிப்பிடத்தக்கன. 0

உரிமை பெறுவோம்!

(பாவலர் தமிழ்க்குமரன், ஈரோடு)

தென்மொழியைத், தமிழ்நிலத்தைத்
சிதைத்தழிக்கப் பார்க்கின்றார்
தெய்வ ரென்றால்,

வன்முறையைத் தூண்டுகிறார்
பெருஞ்சித்தி ரனாரென்று
வடபு லத்தார்

இன்றுமிக எச்சரித்தே
ஏழிரண்டு நாளினிலே
இதன்வி ளக்கம்

நன்முறையில் தராவிட்டால்
நடவடிக்கை எடுப்பலென
நவிலு கின்றார்,

உரிமைகளை நாம்முழக்கின்
மூரவஞ்சம் புரிபவர்கள்
ஒப்பி டாமல்

பிரிவினையைத் தூண்டுகிறார்
பெருஞ்சித்தி ரனாரென்று
பேசு கின்றார்!

நரிகளுக்கு நாட்டாண்மை
கொடுத்திட்ட கதைபோல்நம்
நாட்டி லின்று!

வரிவேங்கை போலெழுந்து
வஞ்சகத்தை முறியடித்து
வாகை சூடு!

பேச்சுரிமை எழுத்துரிமை
பேணுவது குற்றமென்றார்
இங்கு மக்கள்

ஒச்சுகின்றார் கோலென்றே
உலகத்தை நம்பவைத்தே
உயர்ந்த வர்கள்,

போச்செல்லாம போச்சினியும்
பொறுமையுடன் இருப்பதுவோ?
பொங்கி யார்த்து

மூச்சான விடுதலைக்கு
முனைந்துகளம் புகுந்துபகை
முடித்து வெல்வோம்.

விடுதலைக்கு விலைகொடுத்து
வெம்பகையை முடித்துவெல்வோம்
மைந்து வரீர்!

கொடுமைகட்கு முடிவுகட்டிக்
கொயகளத்தில் நாமார்த்துக்
குவிடபோம் வெற்றி!

படுகொலைகள் பலநடக்கும்
படைமுகத்துச் சூளுரைத்துப்
பகைமு டித்து

நடுங்காத ஆண்மையுடன்
நாமெழுந்து வென்றுதமிழ்
நாட்டை மீட்போம்.

'பாவலர்' அவர்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள்!

பேரன்புடையீர், வணக்கம். தமிழ்நிலம் 12-1-86 ஆம் இதழில் திராவிடர் கழகத்தின் செயற்பாடுகளைத் திறனாய்வு முறையில் (?) எடுத்துக் கூறியுள்ளீர்கள். திறனாய்வா? திரைமறைவா? என எண்ண வேண்டியுள்ளது.

சாதி ஒழிப்புக்கு 25 ஆண்டுக்காலக் கழுக்க முன்றத் திட்டத்தைத்தாங்கள் 'தென்மொழி' ஏடுமூலம் தெரிவித்தபோதே தாங்கள் குமுகவியலைப் பற்றிய சரியான தடயங்கள் தெரியாமல் திக்கு முக்காடுகின்றீர்கள் என்பதை உணர்ந்து கொள்ள முடிந்தது. தங்கள் திட்டத்தை எதிர்த்துத் 'தென்மொழி'யில் எழுதியிருக்கிறேன். இதுபோலவே தந்தை பெரியாரின் உயிர் மூச்சான வகுப்புரிமைச் சலுகை குறித்துத் 'தமிழ்நில'த்தில் எதிர்த்து எழுதினீர்கள். அப்போது அதை மறுத்துப் 'பாவலரேறு பாதை மாற வேண்டாம்' என மடல் விடுத்தது தமிழ்நிலத்தில் வெளிவந்தது. ஆகவே தமிழின முன்னேற்ற முயற்சியில் தமிழர் தளபதி வீரமணி அவர்களுக்கு எதிர்ப்பான நிலைகளைத் தாங்கள் மேற்கொண்டதில்லை என்று கூறுவது முழுப் பொய்யாகும்.

ஏதோ, ஆகத்து 15-1978 ஆம் ஆண்டின் இந்தி எதிர்ப்பு மாநாட்டில் "தமிழ் நாட்டைத் தனியாகப் பிரிக்கப் போராட வேண்டும்" என்று தாங்கள் பேசியதாலேயே, திராவிடர் கழகம் தங்களை வளரவிடாமல் தடைப்படுத்துவதாக இன்னொரு பொய்யை அவிழ்த்து விட்டிருக்கிறீர்கள். ஐரோப்பியச் சுற்றுச் செலவின் போது, தளபதியாரை வைத்துக்கொண்டு, அங்குள்ள தங்கள் கழகத்தினர், "பெரியாருக்குப் பிறகு அவரது பணியைத் தாங்களே செய்வதாகக்" குறிப்பிட்டுப் பேசியதைத் தாங்கள் மறுக்காததும், தளபதி வீரமணி அவர்களை விடத் தாங்கள் பெரிய தலைவர் என்னும் செயலில் அங்குச் செயல்பட்டதும்தான் திராவிடர் கழகம் உங்களைத் திரும்பிப் பார்க்காமல் இருப்பதற்குக் காரணம் என்பதை ஏன் திசை திருப்பித் திராவிடர் கழகத்தை கொச்சைப் படுத்துகிறீர்கள்.

'தென்மொழி' சுவடி: 21, ஓலை: 5 இல் "இந்தியைத் தடுக்க முடிந்ததா, நம்மால்?" என்னும் ஆசிரியர் உரையில், கலைஞரைப்பற்றியும் - தளபதி வீரமணி பற்றியும் குறிப்பாகக் கலைஞரைப்பற்றி எத்துணைக் கேடுகெட்டத் தனமாக எழுதிக் கொட்டியிருக்கிறீர்கள். அப்படி எழுதிய உங்களுக்குக் கலைஞர் இந்தி எதிர்ப்பில் எங்ஙனம் ஈடுபடவேண்டும் என அறிவுரை கூற தகுதி இருக்கமுடியுமா?

அம், அம் என்று குழந்தை பால் குடிப்பதால், தாயின் மார்பகத்திற்கு அம்மம் எனவும், அதை உடையவள் அம்மா எனவும் விளக்கம் சொல்வதாலேயே தாங்கள் தலைவராக முடியுமா? நீங்கள் தமிழறிஞர் என்ற நிலையோடு எழுதுங்கள். தகுதி மீறித் தலைகொழுத்தத் தனமாக, தான்தான் தலைவன் என்று எதையும் எழுதுவது என்பதை அருள்கூர்ந்து இனியாகிலும் நிறுத்துங்கள். இதுதான் எனது பணிவான வேண்டுகோளாகும்.

ஆசியாவின் மிகப்பெரிய சீர்திருத்த குமுக இயக்கமான திராவிடர் கழகமும், மிகச் சிறந்த அரசியல் இயக்கமான திராவிட முன்னேற்ற கழகமும் இந்தியை வீழ்த்த எங்ஙனம் செயல்படுவது என்பது அவ் வியக்கங்களுக்கும், அவற்றின்பால் நம்பிக்கை கொண்ட அறிஞர்களுக்கும் தெரியும்.

உண்மையுள்ள, சம்பூகன், திருச்சி-16.

உ. த. மு. க. கலந்தாய்வு!

தி. பி. 2017, சுறவத் திங்கள் 21 - ஆம் நாள் (2.2.1986) அன்று, உடுமலை பசுபதி வீதியிலுள்ள 'தம்பி கலையரங்கத்'தில், தாராபுரம்-உடுமலை-பழனி ஆகிய வட்டங்களின் உ.த.மு.க. கிளைகளின் கருத்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோழ்து, குமுக வினைப்பாடுகளில் முனைப்புக்கொள்வதற்கான கருத்துகள் கலந்தாயப் பெற்றது.

(அ) சுவர் எழுத்து விளம்பரங்கள்

(ஆ) கலை நிகழ்ச்சிகள் மூலம் ஊரகங்களில் கொள்கைப் பரப்பல்

(இ) இதழ்களைப் பரப்புவது (தமிழ்நிலம், தென்மொழி தமிழ்ச்சிட்டு இதழ்களின் விற்பனைப் பெருக்கம்.)

என்ற வேலைகளை முதன்மையாகச் செய்வது குறித்து முடிவு செய்யப்பெற்றது.

திருவாளர்கள்: கு. நா. தமிழ்நெஞ்சன், ப. அறவாழி, கி. சேரங்கராயன், அரசுமணியன், பூவிடைமறவன், தமிழ்வென்றி ஆகியோர் கலந்தாய்வில் பங்கு பெற்றனர்.

முதலாவதாக, சுவர் எழுத்து விளம்பரத்தையும், இதழ்கள் விற்பனைப் பெருக்கத் திட்டத்தையும் தாராபுரம் வட்டத்தில் இம்மாத (பிப்ரவரி) இறுதியில் மேற்கொள்வதெனவும் முடிவு செய்யப்பெற்றதோடு கூட்டம் நிறைவெய்தியது. 0

போராடிப் பெறுவதே நாட்டு விடுதலை!

அறிவியலர்களுக்குக் குமுகப்பார்வை வேண்டும்!

— ஏ. எசு. மூர்த்தி —

ஒரு சிறிய கதை. ஆனால் இது முற்றிலும் கற்பனையே. யாரையும் புண்படுத்துவதற்காக அல்லாது, ஒரு செய்தியை எடுத்துரைக்கும் இந்தக் கட்டுக் கதையை, அமெரிக்காவில் பல ஆண்டுகள் வாழ்ந்து இந்தியா திரும்பிய ஒரு அறிவியலர் கூறினார். கதை இதுதான்!

ஓர் ஊரில் மருத்துவர் ஒருவர் இருந்தார். அவர் மாந்த உடற்கூறு ஆய்வாளர். தமது ஆய்விற்காக அவர் இறந்த உடலங்களைப் பயன்படுத்தினார். அவரின் போகூழ் அவருக்கு அவரது ஆராய்ச்சிக்குப் போதுமான உடலங்கள் கிடைக்கவில்லை. அவர் செயலர் ஒருவரை அமர்த்தினார். ஒழுங்காக உடலங்கள் கிடைத்தன. கல்லறையிலுள்ள பிணப் பெட்டிகளிலிருந்து உடலங்கள் களவாடப்பட்டதாக, அந்த ஊரில் கூக்குரல் எழுந்தது. மருத்துவர் சொன்னார்: ''அதைப்பற்றி எனக்கென்ன கவலை, நான் ஆராய்ச்சியாளன். எனக்கு உடலங்கள் தேவை. என்னுடைய ஆள், அதை எப்படிக் கொண்டு வருகிறான் என்பது எனக்கு ஒரு பொருட்டன்று.''

விரைவில் கல்லறையும் காலியானது ஆனாலும் ஆராய்ச்சியாளருக்கு நாளும் இறந்த உடல் ஒன்று கிடைத்துக் கொண்டிருந்தது. அந்த ஊரில் அச்சம் பரவிற்று. இரவில் இருண்ட தெருக்களில் தனியாகச் செல்வோர் ''மறைந்து'' விடுகிறார்கள் என்று. அது பற்றி மருத்துவருக்குக் கவலையில்லை. அதைத் தொடர்புடைய வேறு யாரோ கவனிக்க வேண்டும். நமது கதைத்தலைவர் ஆராய்ச்சியில் மூழ்வுரமாக இருந்தார்.

ஒருநாள் மாலை, தமது ஆய்வுக்கூடத்தில் உடலத்தைச் சுற்றியிருந்த துணியை அகற்றினார், ஐயகோ! அவர் கண்ட உடல், அவரின் அருமை மகளின் உடலம்!!

நாம் தொடக்கத்தில் கூறியதைப்போன்று, இது மிகைப்படுத்திக் கூறப்பட்ட ஒரு நெறிக்கதை, எந்தத் தொழில் செய்பவராயினும், அவரது தொழிலில் பெரும் ஈடுபாடு அவருக்கு இருந்த போதும், குமுகச் சூழ்நிலையில் இருந்து அவர் விலகியவரல்லர். அவர் வாழும் குமுகத்தின் ஓர் உறுப்பே அவர். அவரது தொழிலோ அல்லது ஆய்வோ குமுகத்திற்குத் தீங்களிப்பதாக அமையக் கூடாது.

மாபெரும் அறிவியலர் ஐன்சுடைன், சோலியட் கியூரி, பெர்ட்ரண்டுரசல் ஆகியோர் தங்களின் வாழ்நாளிலும், அவர்களைப் போன்ற ஆயிரக்கணக்கானோர், இன்றும், அறிவியலரின் குமுகப் பொறுப்புணர்வை வலியுறுத்தியே வந்துள்ளனர்.

அறிவியலர்கள் தங்களின் குமுகாயக் கடமையைக் கைவிட்டு விடுமாறு, யாரேனும் பொறுப்பற்றவர்களால் அவர்களைக் கட்டாயப்படுத்த முடியுமா?

சில நிலைகளில் 'முடியும்' என்றே கூற வேண்டியுள்ளது. ''விண்மீன் போர் வீரன்'' என்றதொரு நூல் அமெரிக்காவில் வெளியிடப்பட்டுள்ளது. நமது விண்வெளிக்கால கருவிகளை உருவாக்கும் இளம் அறிவியலர்களின் வாழ்வை உற்று நோக்கும் நூல் அது. அதன் ஆசிரியரான வில்லியம் புரோடு என்பவர். கலிபோர்னியா லிவர் மோர் தேசிய ஆய்வுக் கூடத்தில் நுண்கதிர், லேசர் கதிர்க்கற்றை விண்வெளிக் கருவிகள் ஆகியவற்றை உருவாக்கும் இளம் இயல்பியல் அறிவலர்களுடன் ஏழு நாள்கள் தங்கியிருந்து அவர்களது வாழ்க்கையை அலசியுள்ளார். அவர்களெல்லாம் நன்கு படித்து, பண்டாரகர் பட்டம் பெற்றவர்கள். ஆராய்ச்சித் துறையில் பெரும் ஈடுபாடு உள்ளவர்கள். ஆனால், அவர்களின் பார்வை வண்டிக் குதிரைப் பார்வையைப் போன்றது. உலக அறிவு அவர்களுக்கு அறவே கிடையாது. அவர்களின் கணிப்பு எந்திரங்களையும், அவற்றின் பொருத்தான்களையும் தவிர வேறு எதிலும் அவர்களுக்கு ஈடுபாடு கிடையாது. அரசியல் நோக்கு ஏதும் அற்றவர்கள். அவர்களது கோட்பாடுகள் மிக வளமானவை. அவர்களில் ஒருவர் 31-அகவை நிரம்பிய டாய்ஐடு, தாம் கண்காணித்து வரும் விண்கப்பலை ஆய்ந்துப் பார்க்கும் முன்னர் உருசியர்கள் வந்து அதைக் கைப்பற்றி விடுவார்களோ என்ற உள்ளத்தின் முழுமையான அவரது அச்சத்தை வெளியிட்டார்.

மற்றுமோர் அறிஞர் ஒருவர் 29-அகவையான பீட்டர் எகல்கமன். உலகின் முதல் நுண்கதிர் லேசரைக் கண்டுபிடித்து, மருத்துவத் துறைக்கு உயர்ந்த பணியாற்றி நோபல் பரிசைப் பெறக் கனவு கண்டவர் அவர். ஆனால் அவருக்குக் குமுகாயப் பார்வை எதுவும் இல்லாததால், இப்பொழுது தமது திறமையையும், ஆற்றலையும் ஈடுபடுத்தி லேசர் கதிர்க் கருவிகளை முழுமையுறச் செய்து வருகிறார். அவரது குறிக்கோள் எல்லாம் காற்றோடு போய்விட்டது. ஒரு பெரும் கருவித் தளவாடக் குழுமம் அள்ளிக் கொடுக்கும் பொருளுதவியுடன், சோவியத்துத் தாக்குதலால் சேதப்பட முடியாத, விண்ணில் வலம் வரும் லேசர் மேடையை அமைப்பதில் தீவிர முனைப்புடன் செயல்பட்டு வருகிறார்.

இன்னும் இதுபோன்ற எத்தனை எத்தனையோ அறிவியலர்கள், தங்களது மிகுவான திறமையைத் தங்களையும், தங்களது குடும்பத்தினரையும் மட்டுமின்றி, அவர்கள் வாழும் குமுகத்தையும், உலகையுமே என்றாவது ஒருநாள் அழித்தொழிக்கும் பெரிய கருவிகளை உருவாக்குவதில் கருமமே கண்ணாக உழைக்கின்றனர்.

குமுகப் பொறுப்புணர்வு ஏதுமில்லாது, தங்கள் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும், நாம் தொடக்கத்தில் கூறிய கதையில் வரும் மருத்துவர்களைப் போன்ற அறிவியலர்கள் கொடுமையானவர்கள்.

இந்தச் சூழலில், அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்ற அமெரிக்க மருத்துவரான பார்னார்டு லௌன், சோவியத்து மருத்துவரான எவ்கெனி சாசோவ் ஆகியோரது அரிய பணியைப் பாராட்டாமலிருக்க முடியாது. நெஞ்சாங்குலை அறுவைப் பண்டுவத்தில் அவர்கள் கைதேர்ந்தவர்கள். அதே நேரத்தில் உலகில் அணுக்கருவிப் போர் வெடிக்காது தடுப்பதற்கு, ஆயிரக்கணக்கான இணை மருத்துவர்களைத் திரட்டியுள்ளனர்.

ஏனெனில், அவர்களுக்குக் குமுகாயப் பார்வை, உலக நோக்கு உண்டு. ∴

சந்தடி சாக்கில்!

இந்தி(யா) ஒழிமைப்பாடு(?) என்ற ஆசிரியவுரையில் 'புதிய கலாச்சாரம்' இதழ் 'இந்தி' எதிர்ப்புக் குரல் எழுப்பியிருப்பதாக எண்ணினோம். 'இந்தித் திணிப்பை'க் கண்டிப்பதில் அது 'காரம்' கொண்டிருப்பதாகக் கருதினோம். குற்றச்சாட்டுகளை 'அரசு மீதும்', திராவிடப் பரம்பரைகள் மீதும் அள்ளி வீசி 'அவர்கள்' விட்டதை 'இது' பிடிக்கப்போகிறது என்றும் துணிந்தோம்.

ஆனால், இலையில் 'மலத்தை' ஓரத்தில் வைப்பதுபோலத் 'தேசிய' உணர்வை எதிர்ப்பதன் மூலம் தனது ஆசிரியவுரையைத் தாழ்த்திக் கொண்டிருக்கிறது 'புதிய கலாச்சாரம்'.

'ஆங்கில எதிர்ப்பைக் கண்டிப்பாக' நாம் நல்ல முறையிலேயே புரிந்து வைத்திருக்கிறோம். ஆனால், 'சந்தடி சாக்கில் கந்தப்பொடி கால் பணம்' என்பது போல; 'நாட்டின் முன்னேற்றத்தைத் தீர்மானிப்பது தேசிய மொழி இல்லை' என்று கூறியுள்ளது 'புதிய கலாச்சாரம்'.

'சொல்ல வந்த செய்தி', 'இந்தித் திணிப்பை' எதிர்த்து என்று கருதினோம். ஆனால், 'தேசிய மொழி ஒரு நாட்டின் முன்னேற்றத்தைத் தீர்மானிப்பதில்லை' என்று பொதுவில் சொல்லித் தப்பிப்பது புதிய கலாச்சாரத்திற்குப் பொருந்தி வரக்கூடியதன்று!

இந்தியா ஒரு தேசியம் ஆக்க முயல்கின்றவர் பக்கம் திரும்பதாயின் 'புதிய கலாச்சாரம்' இராசீவ் காந்தியின் 'கை'யை வலுப்படுத்திட வேண்டியது தானே. இந்தியா ஒரு 'தேசிய இனங்களின் சிறைக் கூடம்' என்றால், எதிர்த்துப் போராட வேண்டாமோ? இந்தி(ய) ஒருமைப்பாட்டை இதில் விளக்குறி என்ன வேண்டிக் கிடக்கிறது.

'தாய்மொழி' அறிவைப் பாராட்டிப் பேசுவதெல்லாம் சரி, இங்கே. 'தேசிய இனச் சிக்கல்' ஒரு வடிவாக எழுந்து வரும்போது, போராடி நிற்கும்போது, எளிய நாட்டுப்புற மக்களின் அறிவு வாயிலாக விளங்கும் 'தாய்மொழி' அடிப்படையை அறிந்துகொண்டே, 'மக்களை' வகுப்பு போராட்டத்திற்குத் திரட்டுவதாகக் கூறிக் கொள்வது, பாட்டாளி மக்களின் கருத்துரிமை பெறும் வாயிலான தாய்மொழி மதிப்பைப் பெறும் உரிமைப் போரும் 'வர்க்கப் போராட்டமே' என்று கருதாமல் கைவிடுவது காட்டிக் கொடுப்பதில் முடியும் என எச்சரிக்கிறோம்.

—பறம்பை அறிவன்.

செய்திச்சுடர்

மண விலக்கு-பெண்கள் கருத்து!

திருமண விலக்குக்கு எந்தக் காரணங்களை முதன்மையானவையாகக் கருதலாம் என்று வரிசை முறையில் தெரிவிக்கும்படி பிரிட்டிசு பெண்களிடையே 'விருப்பங்கள்' (Options) என்னும் செய்தித்தாள் ஒன்று ஓர் அளவாய்வு (Survey) நடத்தியது.

குழந்தைகளை அடித்துத் துன்புறுத்துவதை முதலாவது முதன்மைக் காரணமாகவும், மனைவியை அடித்துத் துன்புறுத்துவதை இரண்டாவதாகவும் கொள்ளலாம் என்று பெரும்பான்மையான பெண்கள் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர். பால் உறவுக் குறைபாடுகள், மலட்டுத்தன்மை, மதுப்பழக்கம், பணத்தொல்லை ஆகியவற்றைச் சில்லறைக் காரணங்களாகவே அவர்கள் கருதுகின்றனர். வேறு பெண்களுடன் கணவன் தொடர்பு கொண்டிருப்பதை மணவிலக்குக்குக் காரணமாய் நூற்றுக்குப் பத்துப் பெண்களே குறிப்பிட்டிருக்கின்றனராம்.

—தினமணி, 1-2-1986.

ஃ ஃ ஃ

கோடிக்கணக்கான சொத்துள்ள பணக்காரர்கள்!

அமெரிக்காவில் சார்சியா பல்கலைக் கழகம் ஒரு வியப்பான புள்ளி விளக்கம் ஒன்றை எடுத்திருக்கிறது.

அமெரிக்காவில் கோடிக்கணக்கில் சொத்துள்ள பெரும் பணக்காரர்களின் தன்மைகளைக் கீழ்வருமாறு அப்புள்ளி விளக்கம் மதிப்பீடு செய்கிறது. பெரும் பணக்காரர்களில் பெரும்பாலோர் தொழில்-வணிகத்துறையைச் சார்ந்தவர்கள். அடுத்த நிலையில் உள்ளவர்கள், மருத்துவர்கள் பொறியாளர்கள், திரைப்பட நடிக-நடிகையர், நூலாசிரியர்கள், விளையாட்டு வீரர்கள் முதலியோரில் ஒரு சிலரே பெரும் பணக்காரர்கள். மொத்தத்தில் பெரும் பணக்காரர்களின் தகுதிப்பாடுகள் இவ்வாறு உள்ளன. அவர் ஒரு வெள்ளையர்; அவர் ஓர் ஆண்; 60 அகவையைத் தாண்டியவர்; முதல் மனைவியுடன் தொடர்ந்து வாழ்பவர்; அண்டை அயலாரின் தேவையை நிறைவு செய்யும் வாணிகம் ஒன்றில் ஈடுபட்டவர்; ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் அரும்பாடுபட்டு முன்னேறியவர். —தினமணி, 1-3-1986.

∴ ∴ ∴

உருசியாவில் குழந்தை பெறுவது ஊக்குவிக்கப்படுகிறது!

உருசியாவில் மக்கள் தொகையை அதிகரிக்கப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பெற்று வருகின்றன. உலகில் பெரும்பாலான நாடுகளில் முதன்மையாக இந்தியாவில் மக்கள் பெருக்கம் கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டு வருகையில், உருசியாவில் மக்கள் பெருக்கத்திற்காக எடுக்கப் பெற்றுவரும் நடவடிக்கைகள் வியப்பை ஊட்டுகின்றன. இந்த ஆண்டுத் தொடக்கத்தில் உருசியாவின் மக்கள் தொகை 27 கோடியே 67 இலக்கம்; சென்ற ஆண்டில் இருந்ததைவிட இது 24 இலக்கம் அதிகம் ஆகும்.

உருசியாவில் பணியாற்றுகின்ற தாய்மார்களுக்குப் பேறுகால விடுமுறை உள்ளாமல் 56 நாள்கள் சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளிக்கப்பெறுகிறது. தவிர குழந்தைக்கு ஓர் ஆண்டு நிறைவு பெறும் வரை, ஓரளவு சம்பளத்துடன் கூடிய விடுமுறை கிடைக்கிறது. தாய் கோரினால் மேலும் 6 மாத காலம் சம்பளம் இல்லாத விடுமுறை அளிக்கப் பெறுகிறது. இவ்வாறு விடுமுறை அளிக்கும் காலத்தை மேலும் நீடிக்க ஒரு திட்டமும் உள்ளது.

அண்ணாவும், தம்பியும்!

'அண்ணா!'

'என்ன தம்பி!'

'ஐதராபாத்தில் நடைபெற்ற தெலுங்கு தேசக் கட்சி மாநாட்டில் அம்மாநில முதல்வர் திரு. இராமராவ் எவ்வளவு அஞ்சா நெஞ்சுடன் பேசியிருக்கிறார் பார்த்தீர்களா, அண்ணா!'

'அப்படி என்ன தம்பி, பேசியிருக்கிறார்?'

'தில்லி தர்பாருக்கு 'சலாம்' போட்டுக் குனிகின்ற 'குலாம்கள்' (அடிமைகள்) அல்லர் நாங்கள் என்று பேசியிருக்கிறாரே!'

'மிகவும் துணிச்சலான பேச்சுதான் தம்பி!'

'தமிழக முதல்வர் யாராவது எப்போதாவது இப்படிப் பேசுகின்ற நாள் வருமா, அண்ணா!'

'எனக்குத் தெரியாது தம்பி!'

— தமிழ்வேள்.

தன்மானமே உரிமைக்கு ஆணி வேர்!

பாலை நிலம் நடுவே மலரும் ஒரு சோலை நிலம்!

"மேற்கு சகாரா" விடுதலைப் போராட்டம்!

பாலை நிலம் :

உலகிலேயே மிகப் பெரிய பாலை நிலம் ஆப்பிரிக்கக் கண்டத்தின் வடமேற்குப் பகுதியில் உள்ள சகாரா பாலை நிலம் தான். இது மேற்கே அட்லாண்டிக் பெருங் கடலையும், வடக்கே மொராக்கோ என்னும் நாட்டையும், வடகிழக்கில் ஒரு பகுதி அல்சீரியாவையும், தெற்கும் கிழக்கும் மோரிட்டேனியா என்னும் நாட்டையும் தன் எல்லைகளாகக்கொண்டு இருக்கிறது. இதன் பரப்பளவு 91 இலக்கம் சதுர அயிரமாத்திரி (கிலோமீட்டர்). அஃதாவது இன்றைய இந்தியாவின் பரப்பளவு 31 இலக்கம் அயிரமாத்திரி (கி.மீ.) என்றால், இதிலிருந்து சகாராவின் நிலப் பரப்பளவைக் கணக்கிடலாம்.

மேற்கு சகாரா :

சகாரா பாலை நிலத்தின் மேற்கு நிலப்பரப்பில் உள்ள ஒரு பகுதிதான் மேற்கு சகாரா அல்லது இசுபானிய சகாரா என்பது. இஃது ஒரு தனி நாடு. இதன் பரப்பளவு மூ இலக்கம் சதுர அயிரமாத்திரி (கிலோமீட்டர்). ஏறத்தாழ தமிழ் நாட்டின் நிலப் பரப்பளவுபோல் உள்ளது; இந் நாட்டின் தலைநகர் வில்லா சிசு நெரோசு. 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆப்பிரிக்காக் கண்டத்தைத் தங்கள் ஆளுமையில் நிலைப்படுத்தி வந்த ஐரோப்பிய வல்லரசுகள் சகாராவைத் தங்கள் கையகப்படுத்தி ஆளுமை செய்தன. அங்குக் கிடைக்கும் இலை கனி (தாது) வளங்களையும், கன்னெய்ய் (பெட்ரோல்) நிலையங்களையும் பயன்படுத்திச் சுரண்டிக்கொண்டிருந்தது இசுபெயின் நாடு.

மக்கள் இனத்தின் அடிமை நிலை :

ஓர் இலக்கம் சதுர அயிரமாத்திரி (கி.மீ.) நிலப் பரப்பளவு உள்ள சகாராவின் மக்கள் தொகை ஓர் இலக்கம்தான். (ஏறத்தாழ சகாரா நிலப் பரப்பளவை விட, சற்றே குறைவான நம் தமிழகத்தின் மக்கள் தொகை 500 இலக்கம்). சகாராவில் பெருமளவு கிடைக்கக்கூடிய பொருள் பாசுபேட் எனப்படும் ஒருவகையான கனி(தாது)ப் பொருள். அறிவியல் அணுமுறையில் உருவாகும் உரத்திற்குத் தேவைப்படும் மூலப் பொருள்களில் இது முதன்மையானது; உலகிலேயே மிகக் கூடுதலாகவும், மிகக் குறைந்த செலவிலும் இக் கனிப்பொருள் சகாராவில்தான் கிடைக்கிறது. இப் பொருள் கிடைக்கும் இடங்களில் நாட்டினப் பழங்குடி மக்களாகிய கருப்பு இன மக்களைப் பெருமளவில் அடிநிலை உழைப்பாளிகளாகவே வைத்தும், அவர்களை அடிமைகள்போல் நடத்தியும், கருப்பு இன மக்களின் உழைப்பைச் சுரண்டியதோடு இல்லாமல், அவர்களின் நிலங்களையும் கையகப்படுத்தி, அடிப்படை வாழ்வியல் உரிமைகளை மறுத்தும், சகாரா நாட்டைத் தனது சுரண்டல் வேட்டைக் காடாக ஆளுமை செய்து வந்தது இசுபெயின் வல்லரசு.

மக்கள் எழுச்சி :

இசுபெயின் நாட்டுச் சுரண்டல் தன்மையையும், தாய் நாட்டு அடிமை நிலைமையையும் உணர்ந்த சகாரா நாட்டு மக்கள் நடுவே உரிமை உணர்வு எழுந்தது. 1950 ஆம் ஆண்டுக்குப் பிறகு இசுபெயின் ஆளுமையாளர்களுக்கு எதிராகச் சிறு சிறு அளவில் மக்கள் அடிப்படை உரிமைகளைக்கோரி அமைதியான முறையில், தங்கள் போராட்டங்களை ஆங்காங்கே நடத்தி வந்தனர். ஆனால், இசுபெயின் வெள்ளை இனச் சுரண்டல் தன்மை, கொடுநெறி வல்லரசு, தன் படைத்துறை வலிமையைப் பயன்படுத்தி, உரிமைக்காகப் போராடும் கருப்பு இன உழைப்பாளர்களை அம் மக்களை அடக்கியும், போராட்டங்களை ஒடுக்கியும், தனது ஆளுமையை நிலைநிறுத்தி வந்தது; எனினும், மக்கள் போராட்டங்கள் தொடர்ந்து வந்ததோடு, தொடக்கத்தில் அடிப்படை உரிமைகளுக்காகவும், வாழ்வியல் நலன்களுக்காகவும் அறவழிகளில் நடைபெற்று வந்த அப் போராட்டங்கள் படிநிலை வளர்ச்சி பெற்று, நாட்டின் விடுதலைப் போராட்டமாக வலுப்பெறவே, கருப்பு இன இளைஞர்கள் கருவி ஏந்திப் போராடும் நிலைக்குச் சகாரா நாட்டு மக்கள் உணர்வெழுச்சியால் உந்தப்பட்டார்கள்.

விடுதலைப் படையின் கரந்துறை(கொரில்லா)போர்

இசுபெயின் சுரண்டல் பிரிவு வல்லரசுக்கு எதிராக மக்கள் போராட்டங்கள் வலுப்பெற்று, இளைஞர்கள் கருவி ஏந்திப்போராடும் கரந்துறை(கொரில்லா)போர் முறையில் சிறு சிறு அளவில் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றனர்; 1960 ஆம் ஆண்டு வாக்கில், சிறு சிறு அளவில் இயங்கி வந்த இப் போராட்டக் குழுக்கள் ஒன்றிணைந்து, முழு நிறைவு பெற்ற ஒரு விடுதலைப் போராட்ட இயக்கமாக, அஃதாவது போலி சோரியா விடுதலை முன்னணி என்ற அமைப்பின் வழி, சகாரா நாட்டு விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து, அதற்கான வேலைத் திட்டத்தையும் வகுத்து, இசுபெயின் வல்லரசுக்கு எதிராகச் சகாரா நாட்டுக் கருப்பு இன மக்கள், கடும் போராட்டங்களை நடத்திவந்தனர்.

இருப்பினும், இசுபெயின் வல்லரசு படைத்துறையின் வலிமைக்குப் போலிசோரியா விடுதலை முன்னணி ஒரு சிறு இயக்கமாகவே இருந்தது. இதனால், ஆளுமைக்காரர்களின் கடுமையான தாக்குதல்களுக்குள்ளாகி, எதிர்நோக்க வேண்டியிருந்தது. இருப்பினும், விடுதலை முன்னணிக்குப் பெருமளவு மக்கள் ஆதரவு இருந்ததால், கரந்துறைபடை மறவர்களை இசுபெயின் வல்லரசின் படைத் துறையினரால் முற்றாக ஒடுக்கிவிட இயலவில்லை. போலி சோரியா விடுதலைப் படையினர்களுக்கு அண்டை நாடுகளான லிபியாவும், அல்சீரியாவும் துணை நின்றதோடு உலக அரங்கில் சகாராவுக்காக விடுதலைக்குரல் கொடுத்தும் வந்தன.

சகாராவின் விடுதலையும், அரசமைப்பும் :

போலி சோரியா விடுதலைப் படையின் கடும் போராட்டங்கள் இசுபெயின் படைத்துறை வலிமைக்குச் சிறு அளவிலான போராட்டங்களே இருப்பினும், இப் போராட்டங்களின் விளைவாகவும், அண்டை நாடுகளின் எதிர்ப்பு நடவடிக்கைகளின் பயனாகவும், இசுபெயின் தனது சுரண்டல் தன்மையை நிறுத்திவிடவும், சகாராவிற்கு விடுதலை கொடுக்கவும் முன்வந்தது. ஆனால், சகாரா நாட்டில் ஆட்சியை உடனடியாக அமைத்து, நிறுவுதலான அரசாக இயங்கக்கூடிய தகுதிகளைப் போலிசோரியா விடுதலை முன்னணி பெற்றிருக்காத நிலையிலே, எது எக்கேடு கெட்டால் எமக்கென்ன என்ற நினைப்பில், இசுபெயின் அரசு 1975 - ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்களில் சகாரா நாட்டிற்கு விடுதலை கொடுத்து விட்டுப் பொறுப்பற்ற முறையில் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டது. உடனடியாக வெள்ளையர்களும் நாட்டை விட்டுத் தாயகம் திரும்பினர் இருப்பினும், விடுதலைப் படையினர் மிகத் துணிவாக, சகாரா அரசு மக்கள் நாயகக் குடியரசு என்னும் பெயரில் அரசு ஒன்றினை அமைத்து, நாட்டின் ஆளுமைக்கு அணியமானார்கள்; நாட்டின் தலைமை அமைச்சராக, போலிசோரியா விடுதலை முன்னணித் தலைவர் 'மகபெத் அலி பெப்யா' அப் பொறுப்பேற்று மிகச் சீரிய முறையில் ஆளுமை செய்ததோடு அல்லாமல், மக்கள் மனம் மகிழும்படியாக நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு வந்தார். அதுபோழ்து, 'ஆப்பிரிக்க நாடுகள் ஒற்றுமை இயக்க மாநாடு' ஒன்று கூடியது. அம் மாநாட்டில் சகாரா அரபு மக்கள் நாயகக் குடியரசின் படிநிகராளியாக, 'மகபெத் அலி பெயிபா'வைக் கலந்து கொள்ளும்படி அழைப்பு விடுக்கப்பெற்றது. 50-க்கும் மேற்பட்ட நாடுகள் அடங்கிய இவ்வமைப்பில் 31 நாடுகள் சகாராவைத் தனி நாடு என ஏற்றுக்கொண்டு ஏற்பிசைவு தந்தன (அங்கீகரித்தன).

மொராக்காவின் படையெடுப்பு :

விடுதலை பெற்ற சகாராவின் அரசை ஏற்க, ஆதரிக்க விரும்பாத அண்டை நாடுகளான மொராக்காவும், மொரிட்டேனியாவும், அல்சீரியாவும் இசுபெயின் விட்டுச்சென்ற சகாராவை யார் மேலாளுமை செய்வது என்பதில் கவனம் செலுத்திப் போட்டி போட்டு முயன்று கொண்டிருந்தன. ஆனால் மொராக்கா முதல் முறையாக நடவடிக்கை எடுத்து, சகாரா மீது படையெடுப்பு நடத்திப் பெரும்பகுதிகளைக் கையகப்படுத்திக் கொண்டது. மொராக்காவின் இரண்டாம் மன்னராக இருக்கும் உசேன் (காசன்) என்பவர் ஒரு சரியான பிற்போக்காளரும், அமெரிக்க அடிவருடியும் ஆவார். எனவே, சகாராமீது மொராக்கா படையெடுப்பின் போது, அமெரிக்காவும் பின் வலுவாக இருந்தது; 1975, நவம்பர் திங்களில் 30 ஆயிரம் மொராக்காப் படை வீரர்கள், சகாரா மீது படையெடுத்து ஏறத்தாழ 3 இலக்கம் (லட்சம்) மொராக்கா நாட்டினரைக் குடி அமர்த்தியதோடு. படைத் தளங்களையும் அமைத்து ஆளுமை செய்ய முற்பட்டனர்; சகாரா கருப்பு இன மக்களை மீண்டும் அடிமைப்படுத்தினர்,

மொழி, இன, வேறுபாடும்,
உ. ஒ. பே. (ஐ.நா.) தீர்மானமும் :

மொராக்கா நாட்டினர் பெர்பர் என்னும் மொழி பேசும் அரபியர்களானதால் மொழியாலும் சகாரா நாட்டினர்க்கு வேறுபட்டவர்களாகவும், சகாரா நாட்டினர், கருப்பு இன அரபியர்களானதால், இனத்தாலும் மாறுபட்டவர்களாகவும் உள்ளனர். மொராக்கா நாட்டிற்கு சவுதி அரபியாவும் பின்வலுவாக இயங்கி வருகிறது. ஆண்டு ஒன்றிற்கு 500 கோடி உருபா பெறுமானமுள்ள படைக் கருவிகளை இலவயமாக வழங்கி வருகிறது. இதற்குப் பகரமாக மொராக்காவிடமிருந்து சகாராவில் கிடைக்கும் இரும்பு மற்றும் உரத்திற்குத் தேவையான மூலப் பொருள்களைக் குறைந்த விலையில் பெருமளவு வாங்கிக் கொள்கிறது. இவ்வகையில் சகாரா நாட்டுக் (தாது) கனி வளங்கள் கொள்ளையிடப்படுவதோடு, அந் நாட்டு மக்களை மேலும் அடிமைப் படுத்துவதைக் கண்டு, கருப்பர் நாடுகளிலும், இந்தியாவும் உ. ஒ. பே. (ஐ.நா.)வில் தீர்மானம் ஒன்றினைக் கொண்டுவர மொராக்கா மீது குற்றஞ்சாட்டி வற்புறுத்தினர். இதன் விளைவாக உலக ஒன்றிய பேரவை மொராக்காவிற்கு சகாராவின் ஆளுமை செய்வது யார் என்று முடிவு செய்யப் பொதுமக்கள் கருத்தெடுப்பு நடத்தி, அதன் முடிவுப்படி நடந்துக்கொள்ள ஆணையிட்டது. மொராக்கா கருத்தெடுப்பு நடத்தாமல காலத்தை நீளுக்கி வருவதோடு, சகாராவில் தன் படை வலிமையையும் நாளுக்கு நாள் பெருக்கி வருகிறது. அண்டை நாடுகளின் தலைவர்கள் போலிசோரியா விடுதலை முன்னணித் தலைவர் மகபெத் அலி பெயிபாவோடு அமைதியான முறையில் பேச்சு நடத்துமாறு பலமுறை வேண்டுகோள் விடுத்தும் பொருட்படுத்தாமல், மொராக்கா மன்னர் உசேன் தட்டிக்கழித்து வருகிறார்.

மீண்டும் புரட்சிக்கான விடுதலைப்போர் :

சகாராவில் படைத் துறையினர் வலிமையைப் பெருக்கி வருவதோடு, ஆளுமை செய்ய எங்களுக்கு உரிமையுண்டு என உலகிற்கு மொராக்கா கூறினாலும், மக்கள் உண்மையான ஆளுமை அரசாக போலிசோரியா அமைத்த அரசைத்தான் ஏற்றுக் கொண்டுள்ளனர். சகாரா 'அரபு மக்கள் நாயக குடியரசு' அமைப்பையும், சகாரா தனி நாடு என்பதையும், இந்தியா உள்பட 61 நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன (அங்கீகரித்துள்ளன). போலிசோரியா விடுதலைப் படையினர் மீண்டும் தங்கள் இயக்கத்தை வலுவான முறையில் கட்டமைத்துத் தங்கள் தாய நாட்டின் விடுதலையை உறுதி செய்து வருகிறார்கள். அண்மையில் 'அம்சர்நாத்' என்ற இடத்தில் மொராக்கா படை தளத்தில் போலிசோரியா விடுதலைப் படையினர் நடத்திய கடும் தாக்குதலில் 200-க்கும் மேற்பட்ட மொராக்க வீரர்கள் கொல்லப்பட்டதாகவும், 1,000-க்கும் மேற்பட்டவர்கள் கருவிகளைப் போட்டுவிட்டு ஓடி விட்டதாகவும், மேலும், போலிசோரியாவின் நடவடிக்கைகளால் பலகனிமப் பொருள்களின் தொழிற்சாலைகள் மூடப்பட்டனவாகவும், தொடர்ந்து போலிசோரியா வீரர்கள் முன்னேறி வருவதாகவும், பெருமளவு மக்கள் போராட்டங்களில் பங்கெடுத்து வருகிறதாகவும், மிக விரைவில் மொராக்காவினரை முழுமையாக விரட்டி அடித்து முழு விடுதலையை வென்றெடுப்போம் எனவும், சகாரா தலைமை அமைச்சர் மகபெத் அலி பெயியா கூறி வருகிறார். உலக அரங்கில் 61 நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சகாராவையும், சகாரக அரபு மக்கள் நாயகக் குடியரசையும், 1-10-1985 அன்று இந்தியா ஏற்றுக்கொண்டதும், 2-10-1985 அன்று மொராக்கா இந்தியாவுடன் ஆன அனைத்துத் தொடர்புகளையும் துண்டித்துக் கொண்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. எவ்வளவோ தொலைவிலுள்ள சகாராவிற்குக் காட்டும் இரக்கத்தை அருகில் உள்ள தமிழீழத்திற்குக் காட்டக் கூடாதா என்பதுதான் தமிழர்களின் வினவும் - வேட்கையும். வாழ்க விடுதலை உணர்வு!

வெல்க சகாரா விடுதலைப் போராட்டம்!!
மலர்க சகாரா என்னும் தனி நாடு!!!

- வியனரசு

இருபதாம் நூற்றாண்டின் எட்டப்பன் !

பேரா(சையா)சிரியர் மு: சதாசிவத்தின் மூல ஆங்கில மடல்)

[மூன்றும் பக்கத்தின் ஆங்கிலத் தொடர்ச்சி]

My various appeals to Peruncitran to stop this unbecoming habit of publishing scandals about top leaders in his journals was not heeded by him. I believe that only the Court of law can restrain him from his anti-national and communal activities. Hence I Pray to you, Sir, to take up Mr. Perunchitranar to the Court of Law and file a suit against him.

Kindly include me as one of the witnesses in this case. Thanking you,

Yours faithfully,
(Sd.) M. Sadasivam,

Encls :

1. One book 'Scandals published by Perunchitanar''.
2. One booklet ''The hypocrisy and Rascality of Perunchitran''.
3. Vicious Character of Perunchitran.
4. The copy of the Judgement on the writ petition filed by Perunchitranar against the late lamented and beloved Prime Minister Mrs. Indira Gandhi.

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்:

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருத்திய பொதுவுடைமைப் பொருளியல்
- மனம், அறிவு, வாழ்க்கை - இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். [இதழ் எண்: 71] பதிவு எண். TN/MS C)657

அனுப்புதல்:
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு.
திருவல்லிக்கேணி
சென்னை—5
தொலைபேசி எண்: 847829

பெறுநர்.
திரு/திருவாட்டி

நூல்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00